
# பாரதி கவிதைகளில் குறியீடுகள்!




குறியீடு என்பது, ஒன்று மற்றொன்றை, மறைபொருளில் கவிதைவரிகளில் உணர்த்துவது. பயன்படுத்தப் படும் சொல், தன் பொருளைத் தராது, பிறிதொன்றைச் சுட்டும். மகாகவி பாரதியை தன்னுடைய ஞான ஆசான் எனும் கா.வி.ஸ்ரீ அவர்கள், பாரதியின் கவிதைகளில் குறியீடுகள் என்னும் ஒரு நூலை தன் முனைப்பிலான ஆராய்ச்சியில் எழுதியுள்ளார். பாரதியின் மீதான அவரது காதல், அங்கங்கே சொல்வடிவில் பரிமளிக்கிறது.

பொதுவாகத் தமிழ்ப் பற்றாளர்கள், எவரும் தற்காலத்தில் சம்ஸ்கிருதத்தைத் தொடுவதில்லை. ஆழ்ந்த தமிழ்ப் பற்றுக் கொண்ட, நூலாசிரியர், பிற்காதத்தில் சம்ஸ்கிருதத்தை ஐயம் திரிபறக் கற்றுள்ளார். அஃது, அங்கங்கேப் புலப்படுகிறது, காட்டுகளின் மூலம். நூலை பாரதியோடு வாழ்ந்தவர்கள், பழகியவர்கள், ஆனந்தித்தவர்கள் என பாரதியோடு, சொல்லிலும் செயலிலும் தொடர்புடைய யாவருக்கும், சமர்ப்பனம் செய்கிறார். நூலில் குறியீடு என்பதற்கு அறிமுகமும் தருகிறார். நட்புக்கரம், வணக்கத்தின் குறியீடு என்பனவாய். செய்தியை வெளிப்படையாகச் சொல்லாமல், தேவைப் படுபவர்க்கு, விளங்கும்படி சொல்வது குறியீடு. (சங்கேத மொழியில்).

எளிதாகச் சொல்ல வேண்டுமானால், கண்ணதாசனின், எட்டடுக்கு மாளிகையில் ஏற்றி வைத்த என் தலைவன் எனும் பாடலைக் கொள்ளுங்கள். இங்கே தலைக்கு மேல் தூக்கி வைத்து கொண்டாடியத் தலைவன் என்பது உட்பொருள். நூலாசிரியர் கூறுகிறார், சொற்கள் கூடி தொடர் ஆக அவை புலவன் கரத்தில், கவிதையாகிறது. அதன் நயத்தின் உயிர் குறியீடு என்கிறார். சாலை விதிகளின் குறியீடுகள், மற்ற மாநிலத்தவருக்கு, மொழியறியாதவருக்கு பயன் படுதல் போலவே கவிதைக் குறியீடு, இலக்கியக் குறியீடு என்கிறார். நீண்ட செய்திகளைச் சுருக்கும். "சந்தியா" இரண்டும் சந்திக்கும் பொழுது. காடுவெளிச்சித்தரின், "நந்தவனத்தில் ஓர் ஆண்டி" எனும் பாடல், சிறந்த எடுத்துக் காட்டு என்கிறார். உட்பொருள் ஆன்மீக ஈடுபாடு கொண்டோருக்கே பயன் என்கிறார்.

வாசிப்போரின் புரிதலுக்காக, வாழ்வியல் குறியீடுகள் சிலவற்றையும் பதிகிறார். சாலைக் குறியீடு, அரசியல் கட்சி குறியீடு, உணவுவிடுதி, மருத்துவர் இவற்றோடு, தன்னிச்சையாகத் திரிபவரை கோயில்மாடு என்பதையும், குறைந்த நேரத்தில் குளிப்பதை காக்கா குளியல் எனவும் மலடிமகன், ஆகாயத்தாமரை என இல்பொருள் கொண்டு கூறுவதையும் வரிசை படுத்துகிறார்.

சைகையோடு தொடங்கிய மனிதன், ஒலியெழுப்பிய பின், தனக்குப் பின்னே வருவோர்க்கு உணர்த்த குறியீட்டைத் தான், வரலாற்றுப் பதிவுக்கும், ஒரு நிகழ்வை உணர்த்தவும் செய்தான் என்பதாக, படிப்பவர்க்கு புரியும் வண்ணம் வாழ்வியலில் வெவ்வேறு தளங்களில் குறியீட்டு உத்தியின் பயன் பாட்டைதெளிவுடன் விளக்குகிறார்.

கிட்டதட்ட 260 பக்கங்கள் கொண்ட நூலில், நூலாசிரியர், பாரதியின், கவிதைகளில் குறியீடு என்பதை 130 பக்கங்களில் மட்டுமே பதிந்துள்ளார். அவரது, சிந்தனைக்கு, வடிவம் கொடுக்க பயன் பட்ட நூல்களையும், படைப்பாளர்களின் நுட்பத்தையும் நமக்கு தருவதை ஒரு கடனாகவே செயல்படுத்தியுள்ளார் நூலாசிரியர் திரு கா.வி.ஸ்ரீ.

இனி நூலாசிரியரின் பார்வையில் பாரதியை நோக்குவோம்.